KREON FINNANCIAL

To
The Corporate Relations Department
The Bombay Stock Exchange Ltd,
Floor No. 25, P.J. Towers, Dalal Street,
Mumbai – 400 001.

November 07, 2025

Dear Sir,

Sub: Newspaper Advertisement under Regulation 47 of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015
Ref: Scrip Code – 530139

Pursuant to Regulation 47 of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, we are enclosing the copies of newspaper advertisement published in the Trinity Mirror (English) (Annexure-A) and Makkal Kural (Tamil)(Annexure-B) dated November 07, 2025 regarding the publication of unaudited financial results of the Company for the quarter and half year ended September 30, 2025 which were approved by the Board of Directors in its meeting held on November 06, 2025. The same has been made available on the Company's website (www.kreon.in).

Submitted for your information and records.

Thanking You.

Yours Faithfully,

For **KREON FINNANCIAL SERVICES LIMITED**

NIHARIKA GOYAL
Digitally signed by NIHARIKA GOYAL
Date: 2025.11.07 17:21:42 +05'30'

(NIHARIKA GOYAL)
CHIEF COMPLIANCE OFFICER

Akhil Dokania, Senior Vice President, Infrastructure and Energy Transition, Jeffries India Private Limited ,Devan Kampani, Managing Director- Investment Banking, JM Financial Limited , Pawan Kumar Jain, Chief Financial Officer, Emmvee Photovoltaic Power Limited, Manjunatha Donthi, Chairman and Managing Director, Emmvee Photovoltaic Power Limited, Suhas Donthi, Whole Time Director, President and Chief Executive Officer, Emmvee Photovoltaic Power Limited, Donthi, Head of Business Development, Emmvee Photovoltaic Power Limited, Manish Jain, Asst. Vice President, IIFL Capital Services Limited, Nitin Pasricha, Managing Director, Industrials & Auto, Kotak Mahindra Capital Company Limited.

Emmvee Photovoltaic Power IPO opens on Nov 11

Mumbai, Nov,7: Emmvee Photovoltaic Power Limited proposes to open an initial public offering of its equity shares of face value of Rs.2 each on Tuesday, November 11, 2025. The Anchor Investor Bidding Date is one Working Day before the Bid/Offer Opening Date, being, Monday, November 10, 2025. The Bid/ Offer Closing Date is Thursday, November 13, 2025.

The Price Band of the Offer has been fixed from Rs.206 perEquity Share of face value Rs.2 each to Rs.217 per Equity. Bids can be made for a minimum of 69Equity Shares and multiples of 69Equity Shares thereafter.

The offer comprises a fresh issue of equity shares aggregating up to Rs.21,438.62 million (Rs.2143.86 Crore) and an offer for sale of up to Rs.7,561.38 million (Rs.756.14 Crore) by existing shareholders, Manjunatha Donthi Venkatarathnaiah and Shubha Manjunatha Donthi("Promoter Selling Shareholders").

The Equity Shares of the Company are proposed to be listed on BSE Limited ("BSE") and the National Stock Exchange of India Limited ("NSE").

JM Financial Limited, IIFL Capital Services Limited (*formerly known as IIFL Securities Limited*), Jefferies India Private Limited, Kotak Mahindra Capital Company Limitedare the Book Running Lead Managers to the issue.

PhysicsWallah IPO price band Rs. 103 to Rs. 109

Mumbai, Nov 7: Physicswallah Limited IPO shall open its Bid/Offer in relation to its initial public offer of Equity Shares on Tuesday, 11thNovember 2025. The Anchor Investor Bidding Date is one working day prior to bid/ offer opening date, being Monday, 10th November 2025. The Bid/ Offer Closing Date is Thursday, 13th November 2025.

The total offer size comprises of a fresh issue of equity shares of face value of Rs.1 each aggregating up to Rs.3480 Crores. The IPO includes a fresh issue of equity shares of face value Rs.1 each aggregating up to Rs.3100 Crores and an offer for sale of equity shares of face value Rs.1 each aggregating up to Rs.380 Crores.

Price Band of the issue is fixed at Rs. 103/- to Rs 109/- per equity share. Bids can be made for a minimum of 137 Equity Shares and in multiples of 137 Equity Shares thereafter

The company proposes to utilize the net proceeds from the issue towards multiple strategic objectives.

Management of PhysicsWallah Limited - Mr. Alakh Pandey (Whole-Time Director and Chief Executive Officer, PhysicsWallah Limited) & Mr. Prateek Maheshwari (Whole-Time Director, PhysicsWallah Limited) at the PhysicsWallah Limited's press conference to announce their Initial Public Offering.

Kotak Mahindra Capital Company Limited, J.P. Morgan India Private Limited, Goldman Sachs (India) Securities Private Limited and Axis Capital Limited are the bankers to the issue.

Pricol sees 42% growth in net profit

Chennai, Nov 7: Pricol added 2.40% to Rs 530 after its consolidated net profit jumped 41.97% to Rs 63.99 crore in Q2 FY26 as against Rs 45.07 crore posted in Q2 FY25.

Revenue from operations increased 51.97% year on year (YoY) to Rs 987.93 crore in Q2 FY26.

Profit before tax was at Rs 84.55 crore in the second quarter of FY26, up 40.91% as against Rs 60 crore posted in Q2 FY25.

During the quarter, EBITDA jumped 41.59% YoY to Rs 123.35 crore while EBITDA margin stood at 12.49%.

Vikram Mohan, MD, said: "Our performance this quarter reflects our continued focus on operational excellence and strategic execution. The evolving market dynamics present both opportunities and challenges, and we are well positioned to navigate this landscape through our diversified approach and technological capabilities. Our dedicated team continues to work closely with all stakeholders to meet the evolving needs of market for value creation

Bank of Baroda sponsors Indian Navy Half Marathon

Chennai, Nov 7: Bank of Baroda has partnered with the Indian Navy as the Title Sponsor for the first-ever Chennai edition of the Indian Navy Half Marathon 2025.

A press conference organized by the Indian Navy was held on November 4, where D.N. Suresh, General Manager and Zonal Head – Chennai; V.G. Senthil Kumar, Deputy General Manager – CA; and Srinivas Ravipati, Deputy General Manager – BD, represented Bank of Baroda.

During the event, D.N. Suresh, General Manager and Zonal Head – Chennai, along with Commander Suravath Mahon, Naval Officer (Tamil Nadu and Puducherry, Indian Navy); Dr. Ayyappan Ponnusamy, Medical Director and Chief Radiation Oncologist, Kauvery Hospital; and Mr. Nagaraj Adiga, Race Management Partner, Indian Navy Half Marathon – Chennai 2025, jointly unveiled the official race-day T-shirt.

Speaking at the event, Mr. D.N. Suresh said: "Bank of Baroda is proud to be the title sponsor of the Indian Navy Half Marathon. This is not just a race – it's a movement that combines fitness, pride, and purpose. The event promotes vital social causes such as 'Drug-Free India', 'Women Empowerment (Aadishakti Power)', and 'Awareness Against Online Betting and Gambling'."

The Indian Navy Half Marathon 2025 will feature three race categories: Adyar Half Marathon Run (21.1 km), INS Parundu Run (10 km), INS Pallava Run (5 km).

A total prize pool of Rs.10 lakh will be awarded across various categories in this maiden Chennai edition. The race will start at Napier's Bridge and conclude at INS Adyar Beach. Registrations for all categories are now open.

American Tourister brand campaign

Chennai, Nov 7: American Tourister has unveiled its new campaign, "Made in Nashik. For the World," celebrating the city that powers its global success. The campaign highlights the craftsmanship, pride, and community behind the brand's largest factory in Nashik, where over 60 lakh units are produced annually.

Over 25,000 families are connected to the brand, reflecting how local skill drives a global travel icon.

"This isn't just luggage - it's Nashik's skill fuelling global travel," said Anushree Tainwala, Executive Director – Marketing, Samsonite South Asia, adding that the campaign pays tribute to the thousands whose dedication has made American Tourister a symbol of Indian craftsmanship worldwide.

Singapore Court approval for WazirX's scheme

Chennai. Nov 7: Zettai Pte Ltd. today announced that, in a significant development in WazirX's recovery journey, the Hon'ble High Court of Singapore has officially sanctioned the creditor-approved restructuring scheme proposed by Zettai Pte. Ltd with modification. This comes after 95.7% of voting creditors - representing 94.6% in value - re-voted in favour of the Scheme in August 2025.

This approval marks the culmination of months of collaborative efforts between Zettai and the WazirX user community, paving the way for the reopening of the platform.

"The sanction represents a key milestone in WazirX's journey since it marks one of the fastest restructurings in the global crypto industry, despite suffering one of the biggest cyberattacks in the history of this space. We remain fully focused on our mission towards acting in the best interests of our creditors. As soon as the scheme is legally effective based on today's verdict, we will start platform operations within 10 business days. To everyone who stood by us with patience and belief - thank you.", said Nischal Shetty, Founder of WazirX.

GMM Pfaudler reports 27% jump in profit

Chennai, Nov 7: GMM Pfaudler Limited reported a 27 per cent year-on-year increase in EBITDA for the second quarter of fiscal year 2026, reaching ₹122 crore with a margin of 13.5 per cent. The corrosion-resistant technologies company posted revenue of ₹902 crore for Q2 FY26, up 14 per cent quarter-on-quarter and 12 per cent year-on-year.

The company's profit after tax stood at ₹39 crore for the quarter, translating to an earnings per share of ₹9.22. For the half year ended September 30, 2025, GMM Pfaudler recorded revenue of ₹1,697 crore and EBITDA of ₹223 crore, reflecting year-on-year growth of 7 per cent and 21 per cent, respectively.

Managing Director Tarak Patel attributed the improved performance to strong results from the non-glasslined business segment, supporting the company's diversification strategy. Order intake remained robust at ₹878 crore for the quarter, with order backlog rising 21 per cent year-on-year to ₹ 2,146 crore.

ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில்

உடல் உறுப்பு கொடையாளிகளுக்கு 'தியாகச் சுவர்:' மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தனர்

சென்னை, நவ. 7–

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில், உடல் உறுப்பு கொடையாளர்களை போற்றும் தியாகச்சுவரை திறந்து வைத்தனர்.

மேலும் ஹேண்ட் இன் ஹேண்ட் இந்தியா மற்றும் நார்தர்ன் ஆர்க் கேபிடல் சார்பில் ரூ.87.76 லட்சம் மதிப்பீட்டில் 3 புதிய அவசர கால ஊர்திகள் 108 சேவையின் கீழ் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து, சென்னை மருத்துவக்கல்லூரி முன்னாள் மாணவர்கள் தலைமை அலுவலகத்தை திறந்து வைத்தனர்.

பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

முதலமைச்சர் வழிகாட்டுதலோடு, உடலுறுப்பு தானம் செய்த 253 தியாக சீலர்களுக்கு அவர்களது பெயர், ஊர் மற்றும் தேதி பொறிக்கப்பட்டுள்ள தியாகச் சுவர் (wall of honor) திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. உடலுறுப்பு தானத்தைப் பொறுத்தவரை தமிழ்நாடு அரசு மூளைச்சாவு அடைந்தவர்களை மருத்துவ ரீதியாக சான்று அளிப்பதிலும் அவ்வாறு மூளைச்சாவு அடைந்தவர்களிடமிருந்து உடலுறுப்புகளை தானமாக பெறுவதற்கு அவரவர் குடும்பத்தாரிடம் விருப்பத்தை கேட்டுப் பெற்று உடலுறுப்புகள் பெற்று தேவைப்படும் பயனாளிகளுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்திய அளவில் மட்டுமல்ல உலகளவில் தமிழ்நாடு முன்மாதிரி மாநிலமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை மட்டுமல்லாமல் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 36 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும் எங்கெல்லாம் மூளைச்சாவு அடைந்தவர்களிடம் உடலுறுப்பு தானம் பெறப்படுகிறதோ அங்கெல்லாம் இந்த தியாகச் சுவர் கட்டப்படவிருக்கிறது.

இதுவரை 553 பேர் உடலுறுப்பு தானம் செய்து அரசு சார்பில் மரியாதை செலுத்தப்பட்டிருக்கிறது. இப்படி 2 ஆண்டுகளில் மட்டும் இவ்வளவு பேர் உடலுறுப்பு தானம் செய்திருப்பது என்பது இந்திய அளவில் தமிழ்நாடு தான் இன்றைக்கு முதலிடத்தில் இருக்கின்றது.

23,189 பேர் உடலுறுப்பு தானம்

கடந்த ஆண்டு அதிக அளவில் உடலுறுப்பு தானம் செய்தவர்கள் என்கின்ற வகையில் தமிழ்நாடு முதலிடத்தை பிடித்தது. இந்த திட்டம் அறிந்த பிறகு இதுவரை உடலுறுப்பு தானம் பதிவு செய்திருப்பவர்கள் 23,189 பேர். இப்படி இந்திய அளவில் மட்டுமல்ல உலகளவில் இந்த சிறப்புக்குரிய திட்டத்திற்கு மேலும் நிறைவேற்றுகின்ற வகையில் wall of honour நிறுவப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதிலும் இதுபோல் நிறுவப்படவிருக்கிறது.

சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையைப் பொறுத்தவரை பல்வேறு சிறப்புகளை கொண்ட மருத்துவமனையாக இருந்துக் கொண்டிருக்கிறது. இன்று இந்த நிகழ்ச்சியின் வாயிலாக முன்னாள் மருத்துவ மாணவர்களின் சங்க அலுவலகம் ஒன்றை திறந்து வைத்திருக்கிறோம். இந்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என்பது உலகளவில் பழமை வாய்ந்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனை. ஏறத்தாழ 190 ஆண்டுகளை கடந்து 200வது ஆண்டை நோக்கி பயணித்து வருகிறது.

சங்க அலுவலகமாக மாறியது

ஆக இம்மருத்துவமனையில் முன்னாள் மாணவர்களை ஒருங்கிணைத்து ஒரு சங்கம் ஒன்று நிறுவப்பட்டு அந்த சங்கத்திற்கான அலுவலகம் கடந்த காலங்களில் இந்த மருத்துவமனையின் தொடக்க நிலையில் முதல்வர் அலுவலகமாக இருந்த அந்த அலுவலகம் இப்பொழுது அந்த சங்கத்திற்கான அலுவலகமாக இப்பொழுது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

அதே போல் இன்றைக்கு முதலமைச்சரால் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை தொடர்ந்து ஊக்குவித்து வருகிறார். இன்றைக்கு Hand in Hand India என்கின்ற அமைப்பின் சி.எஸ்.ஆர். பங்களிப்பில் மூன்று 108 அவசர கால ஊர்திகள் இன்றைக்கு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

ரூ.200 கோடி திட்டப்பணிகள்....

முதலமைச்சர் இந்த மருத்துவமனையில் பெருகி வருகின்ற மருத்துவச்சேவையை கருத்தில் கொண்டு, இதை இன்னமும் கூடுதலாக தரம் உயர்த்துவதற்கு ரூ.132.24 கோடி மதிப்பீட்டில் 2,53,543 சதுர அடி பரப்பளவில் 15 தளங்களுடன் கூடிய முதுநிலை மருத்துவ மாணவர்களுக்கான விடுதி கட்டிடம் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.

அதேபோல் ரூ.65 கோடி செலவில் 1,12,246 சதுரஅடி பரப்பளவில் 4 தளங்களுடன் கொண்ட நரம்பியல் துறை கட்டிடம் கட்டிடப்பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. மிக விரைவில் அதற்கான உபகரணங்கள் வழங்கப்பட உள்ளது. அதோடு தற்போது ஏறக்குறைய ரூ.200 கோடிக்கான திட்டப்பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ப.செந்தில்குமார், சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் சாந்தாராமன், தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர் கோபாலகிருஷ்ணன், பொதுப்பணித்துறை கண்காணிப்புப் பொறியாளர் கார்த்திகேயன், செயற்பொறியாளர் அழகிரிசாமி, மருத்துவப் பேராசிரியர்கள் மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

"கூட்டுறவு கீதம்" ஆல்பம்: அமைச்சர் பெரியகருப்பன் வெளியிட்டார்

ரூ. 30 லட்சத்தில் கூட்டுறவு உறுப்பினர் கல்வித் திட்ட சாதனங்கள் வினியோகம்

சென்னை, நவ 7–

முதல்முறையாக கூட்டுறவுக்காகவே இயற்றப்பட்டுள்ள "கூட்டுறவு கீதம்"–ஐ அமைச்சர் பெரியகருப்பன் வெளியிட்டார். மேலும் முதலமைச்சரின் தலையாய திட்டமான "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" நூலினை வெளியிட்டு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள எல்இடி விளம்பரப் பலகையினை திறந்து வைத்தார்.

பின்னர், கூட்டுறவு ஒன்றியங்கள் மூலமாக நடத்தப்படும் உறுப்பினர் விழிப்புணர்வு முகாம், இளைஞர் ஈர்ப்பு முகாம் மற்றும் கூட்டுறவு சேவைகள் குறித்து பொதுமக்களிடம் எடுத்து செல்ல அனைத்து மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களுக்கு ரூ.29,76,108 மதிப்பீட்டில் உறுப்பினர் கல்வித் திட்ட சாதனங்கள் வழங்கப்பட்டது. மேலும், கருணை அடிப்படையில் 6 நபர்களுக்கு இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர், கட்டுநர் பணியிடங்களுக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட்டது.

இவ்விழாவில் அமைச்சர் பேசும் போது தெரிவித்ததாவது:–

ஸ்ரீகாந்த் தேவா

கூட்டுறவின் மாண்பினையும், கூட்டுறவின் செயல்பாடுகளையும், கூட்டுறவும் மகத்துவத்தையும் விளக்கும் வகையில் இன்றைய தினம் "கூட்டுறவு கீதம்" உருவக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. தேசிய கீதம் எவ்வாறு நட்டின் பெருமைகளை விளக்குகின்றதோ, அதேபோன்று "கூட்டுறவு கீதம்" முதல்முறையாக கூட்டுறவுக்காகவே இயற்றப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் கூட்டுறவுத்துறையின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் "கூட்டுறவு கீதம்" பயன்படுத்தப்படும். "கூட்டுறவு கீதம்" கூட்டுறவுத்துறையின் ஒரு அங்கமாக என்றைக்கும் நிலைத்து நிற்கும்.

"கூட்டுறவு கீதம்" உருவாக்க உறுதுணையாக இருந்த, கூட்டுறவுத்துறை முதன்மைச் செயலாளருக்கும், கூட்டுறவு சங்க பதிவாளருக்கும், சிறந்த கூட்டுறவு கீதம் பாடலை தேர்வு செய்த குழு தலைவர் தமிழ்க்கடல் தேவகோட்டை ராமநாமனுக்கும், கூட்டுறவு கீதத்தை எழுதிய ஆனந்த செல்வனுக்கும், கூட்டுறவு கீதத்திற்கு இசை அமைத்து அழகாக இங்கு இசைத்த திரைப்பட இசை அமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவா மற்றும் இசைக்குழுவினருக்கும், இதற்காக பாடுபட்ட அனைத்து துறை சார்ந்த அலுவலர்களுக்கும், எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் பதிவாளர் க.சொ.ரவிச்சந்திரன் வரவேற்புரை ஆற்றினார். நிகழ்ச்சியின் நிறைவாக இணைப்பதிவாளர் வெ.முரளிக்கண்ணன் நன்றியுரை ஆற்றினார். நிகழ்ச்சியில் அரசு முதன்மை செயலாளர் சத்தியபிரதா சாகு, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் க. நந்தகுமார், கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர்கள் மு.வீரப்பன், பழனிவேலு, சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பள்ளி, கல்லூரிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்: சென்னை பெண் என்ஜினீயர் அதிரடி கைது

பெங்களூரு, நவ.7

பெங்களூருவில் பள்ளி, கல்லூரிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த சென்னையை சேர்ந்த பெண் என்ஜினீயர் கைது செய்யப்பட்டுள்ளார். காதலனை சிக்க வைக்க திட்டமிட்டது அம்பலமாகி உள்ளது.

பெங்களூரு கலாசி பாளையம் போலீஸ் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள தனியார் பள்ளிக்கூடத்திற்கு கடந்த ஜூலை மாதம் 14ந்தேதி இரவு இமெயில் மூலமாக வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு இருந்தது. அந்த பள்ளிக்கூடத்தில் வெடிகுண்டு நிபுணர்கள் நடத்திய சோதனையில், வெடிகுண்டு மிரட்டல் வெறும் புரளி என்று தெரிந்தது. இதுகுறித்து கலாசிபாளையம் போலீஸ் நிலையத்தில் வழக்குப்பதிவாகி இருந்தது.

பின்னர் இந்த வழக்கும், பெங்களூருவில் பள்ளி, கல்லூரிகளுக்கு வந்த வெடிகுண்டு மிரட்டல் சம்பவங்கள் பற்றி பெங்களூரு வடக்கு மண்டல சைபர் கிரைம் போலீஸ் விசாரணைக்கு மாற்றி போலீஸ் கமிஷனர் சீமந்த்குமார் சிங் உத்தரவிட்டு இருந்தார். அதன்பேரில், சைபர் கிரைம் போலீசார் வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபர்களை பிடிக்க நடவடிக்கை எடுத்து வந்தனர்.

இந்த நிலையில், பெங்களூருவில் உள்ள தனியார் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்ததாக சென்னையை சேர்ந்த ரெனி ஜோசில்டா (வயது 30) என்பவரை சைபர் கிரைம் போலீசார் கைது செய்தனர். இவர், பெங்களூருவில் உள்ள தனியார் நிறுவனத்தில் கம்ப்யூட்டர் என்ஜினீயராக பணியாற்றி வந்தார்.

ரெனி ஒரு வாலிபரை காதலித்து வந்துள்ளார். அந்த வாலிபர், ரெனியை திருமணம் செய்யாமல் வேறொரு இளம்பெண்ணை திருமணம் செய்திருந்தார். இதனால் தனது காதலன் மீது ரெனி ஆத்திரமடைந்தார். வேறு பெண்ணை திருமணம் செய்த காதலனை போலீசில் சிக்க வைக்க ரெனி திட்டமிட்டுள்ளார். இதற்காக காதலனின் இமெயில் மூலமாக பள்ளி, கல்லூரிகளுக்கு அவர் வெடிகுண்டு மிரட்டல் அனுப்பி வைத்திருந்தார்.

ஏற்கனவே குஜராத்தில் உள்ள நரேந்திரமோடி கிரிக்கெட் மைதானம், மைசூரு, சென்னையில் தனியார் பள்ளிக்கூடங்களுக்கும் ரெனி வெடிகுண்டு மிரட்டல் விடுத்திருந்தார். இதற்காக குஜராத் போலீசார் ரெனியை கைது செய்து அகமதாபாத் சிறையில் அடைத்து இருந்தனர்.

இந்த நிலையில் பெங்களூருவில் உள்ள பள்ளி, கல்லூரிகளுக்கும் ரெனிதான் வெடிகுண்டு மிரட்டல் விடுத்திருந்தது சைபர் கிரைம் போலீசாருக்கு தெரியவந்தது. இதையடுத்து அகமதாபாத் சிறையில் அடைக்கப்பட்டு இருந்த அவரை காவலில் எடுத்து சைபர் கிரைம் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

ரெனி வி.பி.என். இணையதளத்தை பயன்படுத்தியுள்ளார். கேட்கோட் என்ற அப்ளிகேஷன் மூலமாக வெர்ஜுவல் செல்போன் எண்களை பெற்று, 6க்கும் மேற்பட்ட வாட்ஸ் அப்பையும் பயன்படுத்தி வந்ததாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

ரெனி கைதாகி இருப்பதன் மூலமாக வெடிகுண்டு மிரட்டல் தொடர்பாக பதிவான 6 வழக்குகளில் தீர்வு காணப்பட்டுள்ளது. காதலனை போலீசாரிடம் சிக்க வைக்க முயன்று பெண் என்ஜினீயரே போலீசாரிடம் சிக்கியுள்ளார்.

சென்னையில் விபத்தை கட்டுப்படுத்த மேம்பாலங்கள் நடுவே பிளாஸ்டிக் தடுப்பு: மாநகராட்சிக்கு போக்குவரத்து போலீசார் பரிந்துரை

சென்னை, நவ.7–

சென்னையில் அதிவேக விபத்தை தடுக்கும் நடவடிக்கையாக மேம்பாலங்கள் நடுவே பிளாஸ்டிக் தடுப்புகளை மாநகராட்சியுடன் இணைந்து மேற்கொள்ள போக்குவரத்து போலீசார் முடிவு செய்துள்ளனர்.

இளைஞர்களை கவரும் வகையில் அதிக சிசி திறன் கொண்ட மோட்டார் சைக்கிள்கள் சந்தைக்கு விற்பனைக்கு வந்த சமயத்தில் சென்னையில் 'பைக் ரேஸ்' எனப்படும் மோட்டார் சைக்கிள் பந்தய கலாச்சாரம் அதிகரித்து காணப்பட்டது. சென்னையில் உள்ள முக்கிய சாலைகளில் வாகன பரபரப்பு அடங்கிய பின்னர், அசுர வேகத்தில் மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் வாலிபர்கள் ஈடுபட்டு வந்தனர்.

அதிவேகம் ஆபத்து என்பதற்கு ஏற்ப பைக் ரேசால் மோட்டார் சைக்கிளை ஓட்டி சென்றவர்களும், அப்பாவி மக்கள் உயிரிழக்கும் சம்பவங்களும், உடல் உறுப்புகளை இழக்கும் சம்பவங்கள் அரங்கேற தொடங்கின. இதைத்தொடர்ந்து 'பைக் ரேஸ்' கலாச்சாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நடவடிக்கையில் சென்னை போக்குவரத்து போலீசார் ஈடுபட்டனர்.

சென்னையில் ராயபுரம், நேப்பியார் பாலம், கிண்டி, மதுரவாயல் பைபாஸ் சாலை உள்ளிட்ட இடங்கள் இரவு நேரங்களில் 'பைக் ரேஸ்' பந்தய சாலை போன்று பயன்படுத்தப்பட்டு வந்தன. எனவே இந்த இடங்களில் இரவு நேரங்களில் போக்குவரத்து போலீசார் ஆங்காங்கே தடுப்புகளை அமைத்து கண்காணிப்பு பணியை தொடங்கினார்கள்.

இந்த நடவடிக்கை மூலம் 'பைக் ரேஸ்' கட்டுப்படுத்தப்பட்டது. தடையை மீறி பைக் ரேசில் ஈடுபட்டவர்கள் மீது கைது நடவடிக்கை பாய்ந்தது. அதன்படி கடந்த 2 ஆண்டுகளில் 29 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். பைக் ரேசில் ஈடுபடும் நபர்களின் வாகன ஓட்டுனர் உரிமத்தை ரத்து செய்யும் நடவடிக்கையையும் போக்குவரத்து போலீசார் மேற்கொண்டு வருகின்றனர். எனினும் அவ்வப்போது போலீசாருக்கு சவால் விடும் வகையில் பைக் ரேஸ் நடத்தப்படுவதாக குற்றச்சாட்டும் இருக்கிறது.

இந்த நிலையில் சென்னை ராயப்பேட்டையில் நேற்று நடைபெற்ற விபத்தில் 2 பேர் பலியானதற்கு பைக் ரேஸ்தான் காரணம் என்று வெளியான தகவலை போக்குவரத்து போலீசார் மறுத்துள்ளனர். அதிவேகமாக மோட்டார் சைக்கிளில் முந்தி செல்ல முயன்றதே இந்த விபத்துக்கு காரணம் என்று தெரிவித்துள்ளனர்.

விபத்து நடைபெற்ற மேம்பாலத்தில் சாலை நடுவே தடுப்புகள் இல்லாததே இந்த விபத்துக்கான காரணங்களில் ஒன்றாக பார்க்கப்படுகிறது. எனவே சென்னையில் தடுப்புகள் இல்லாத மேம்பாலங்களில் நடுவே மாநகராட்சி உதவியுடன் பிளாஸ்டிக் தடுப்புகள் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து போலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குன்றத்தூரில் அண்ணா தி.மு.க. வாக்காளர் சிறப்பு திருத்தப் பணி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்

காஞ்சிபுரம், நவ. 7–

காஞ்சிபுரம் மாவட்டம் அண்ணா திமுக சார்பில் குன்றத்தூர் ஊராட்சி , குன்றத்தூர் நகர கழகம், மாங்காடு நகர கழகம் சார்பில் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தல் முன்னிட்டு வாக்காளர் சிறப்பு திருத்தும் பணி மற்றும் முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் காஞ்சிபுரம் மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் வி. சோமசுந்தரம் தலைமையில் குன்றத்தூர் ஒன்றிய கழக செயலாளர், ஸ்ரீபெரும்புதூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மதனந்தபுரம் கே.பழனி , கழக அமைப்புச் செயலாளர் வாலாஜாபாத் பா.கணேசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கழக இலக்கிய அணி செயலாளரும், கழக செய்தி தொடர்பாளரும், மாவட்ட பொறுப்பாளருமான எஸ். எஸ். வைகைச்செல்வன கலந்துகொண்டு கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் கழக அமைப்புச் செயலாளர் வாலாஜாபாத் பா. கணேசன், அனைத்துலக எம்ஜிஆர் மன்ற துணை செயலாளர் ஒரத்தூர் என்டி.சுந்தர், நகரக் கழக செயலாளர்கள் மாங்காடு பிரேம்சேகர், குன்றத்தூர் அலெக்சாண்டர் , மாவட்ட இளைஞர் அணி இணை செயலாளர் ஹரிவேந்தர், மாவட்ட மாணவரணி செயலாளர் திலக்குமார் , ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் ஆதனூர் கோபால்ராஜ் , ஒன்றிய பாசறை செயலாளர் மாங்காடு பரத்ராஜ் , மாவட்ட கைத்தறி பிரிவு செயலாளர் வில்வபதி, மாவட்ட அம்மா பேரவை இணை செயலாளர்கள் காவனூர் வெங்கடேசன், படப்பை மோகன்ராஜ் , மாவட்ட அம்மா பேரவை துணை செயலாளர் வழக்கறிஞர் படப்பை ஆ.ராஜேந்திரன், மாவட்ட பிரதிநிதிகள் படப்பை மாரி, சாலமங்கலம் ராஜமாணிக்கம், மாவட்ட பாசறை தலைவர் ஒரத்தூர் என்டிஎஸ்.சுபாஷ் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள் நந்தம்பாக்கம் எஸ்எம்.முத்துராமன், செரப்பனஞ்சேரி ஏழுமலை, மண்ணூர் எம்சிவி.அறிவுச்செல்வன், பிள்ளைபாக்கம் வெங்கடேசன், கிளை கழக செயலாளர் நடுவீரப்பட்டு தீபன்ராஜ், நடுவீரப்பட்டு ஊராட்சி உறுப்பினர் ரகுவரன் உள்ளிட்ட அண்ணா திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.